ஸ்ரீ

மீனாட்சிதுணை.

மதுரைமாநகரத்தில் எழுந்தருளிய

மீனாட்சியம்மன் பேரில்

அம்பிகை மாலை.

எஸ். பி. இராஜாராம் அவர்களது

சென்னை சூளை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

1923,

78

மதுரை.

மீனாட்சியம்மன் பேரில்

அம்பிகைமாலை.

நடக்குந் திருவிளையாட்டோட்று பத்துநாலுஞ் சொக்க, நடக்குந் தென்கூடலி லம்பிகை மாலையை யாறினுக்குத், தடக்குமபகம்பச் சிறுகட்புகர் முகத் தாலவட்ட, முடக்குந் தடக்கை யொருகோட்டு வாரணமுன்னிறகவே.

திருவேவிளைந்த செந்தேனே வடியிட்டதெள்ள முதி, னுருவே மடப்பிள்ளை யோதிமமே யொற்றை பாடகப்பூந், தருவே நின்றுமரைத்தாளே சரணஞ் சரணங்கண்டா, யருவே யணங்கரசே மதுராபுரி யம்பிகையே. (க)

நாட்கொண்ட கொங்கைத்துணையும் பொன்னேயுநஞ்சிழைத்த, வாட்கொண்ட நாட்டமுந் தொண்டைச் செவ்வாயு மருங்குடுத்த, தோட்கொண்டசெம் பட்டு முத்தாரமுங்கொண்டு தோன்றியென்னை, யாட்கொண்டநாயகயே மதுராபுரியம்பிகையே. (உ)

கரும்புங் கணையைந்தும் பாசாங்குசமுங் கைக்கொண்டடியேன், றிரும்புந்திசைதோறுந்தோற்றுகண்

டாயிசைதேக்குமணிச், சுரும்புண்டகாவியுஞ் சோதி நிலாவின்று ளிருஞ்சற்றே, யரும்புங் கனங்குழலாய் மதுராபுரியம்பிகையே. (௩)

வடக்குன்ற மேருவு மூதண்டமட்டும் வளைந்துபு றந், கிடக்குங்கடலும் புவனங்களேழும் கிளர்மருப் புத், தடக்குஞ் சரமெட்டு மெல்லாந் திருவுந்தி தமா ரையி, லடக்கும்பராசத்தியே மதுராபுரியம்பிகையே.

நோக்குங்கருணை விழியாற் பொதுவர நோக்கியெ ன்னைச், காக்கும்படிக்குக் கருதுகண்டாயொளிசுக்கு நிலா, வீக்குஞ்சடாடவி யானுண்டகாள விடத்தை யமு, தாக்குஞ்சிவானந்தியே மதுராபுரி யம்பிகையே.

ஒளிகொண்ட வெம்பிறைத் தோடும் பொன்மே னியுமுறியதோன், றுளிகொண்ட செங்கனிவாயு முத் தாரமுந்தோளுமென்றன், களிகொண்டநெஞ்சங் குடி கொண்டவா விசைகக்கும்வரி, யளிகொண்ட பூங்குழ லாய்மதுராபுரி யம்பிகையே. (௬)

பொடிபட்ட பிட்டுக்குத் தோள்கொண்ட கூடை மண்போட்டுப்பொங்கி, வெடிபட்டவையை யடைத்த வந்நாள் சொக்கர்மேனிசுற்றும், கொடிபட்ட போது முழுநீலக் கோமளமேனியினு, மடிபட்டதோ வணங் கே மதுராபுரி யம்பிகையே. (௭)

விளையுங்கருங்குழி வீழாமலென்றன்வினைப்பிறவி களையும்படிப் பதங்காட்டுவையோ கழுநீரை வென்று

வளையுந்தரள மணிந்தோ டழுத்திய வெள்ளையைச் சென், றனையுங்கயல்விழியாய்மதுராபுரி யம்பிகையே.

போதுங்கலாமதிங் கொன்றைமாலையும் பொன் முடிமேற், சேர்க்குந் தலைவன்முன் செல்லுமப்போது திரண்டமுத்தின், வார்க்குங்குமக் கொங்கையானைக்க திர்மணிமாமுரசு, மார்க்கும் பரிபுறத்தாய் மதுராபுரி யம்பிகையே (கூ)

ஒளியாப்பனித்தடங் கண்ணீர் ததும்பவுந் துன் னடிக்கே, பொழியாப்புது மலரிட்டு நிற்பார்க்குப் பொழிகருணை, விழியாற்சரப்பவலர்ந்த செந்தாமரை வீடுசென்று, மழியாப்பதந்தருவாய் மதுராபுரி யம்பி கையே. (௰)

நாரணங்கொஞ்சும் புகழ்நான்முகற்கும் பொன் னாட்டவர்க்கும், காரணங்கொஞ்சுமுன் சிற்றடியேன் றிசைகட்டுமெட்டு, வாரணங் கொஞ்சுங் கடப்பாடவி யுன் மகிழ்னனுட, னாரணங்கொஞ்சுமம்மே மதுராபுரி யம்பிகையே. (௰க)

ஊடும்பொழுதுங் கருணைவிடா மலுரைப்பவர் தோட், கூடுந்தொழிலை மறைப்ப தொன்றோ நறைக் கொன்றை யுந்தார், சூடுந்தலை வன்றிருமார் பில்வாரி சொரி தரளமாடுந் துணைமுலையா மதுராபுரி யம்பி கையே. (௰உ)

கொடி கொண்ட சிற்றிடையார் பணிநூபுரங் கொஞ்சமடிப், பொடிகொண்ட சென்னியிற்கால்வைக்

குமோபுற்றரவெடுத்து முடிகொண்டசொக்க னழியா விரத முடிக்கவென்றே, யடிகொண்ட பூண்முலையாய் மதுராபுரி யம்பிகையே (௰௩)

பொருந்துங் கழல்விழி மாதர்களாசைப் புணரியில்யான், வருந்துந்துயமொன் றொழிப்பை கொல்லோ மணப்பந்தரிலே, திருந்துங்கரம்பற்றி நற்பரன் றிருமுகச்செவ்வியெல்லா, மருந்துந் துணைவிழியாய் மதுராபுரியம்பிகையே. (௰௪)

பொன்னேநவமணியே யமுதே புவிபூத்தடங்கா, மின்னே யளிவைத்த மெய்ப் பொருளேதப்பு வேலையென்மே, லெந்நேரங் காலன் விடுத்தானீ யிருகையமர்த்தி, யந்நேரம்வந் தனிப்பாய் மதுராபுரி யம்பிகையே. (௰௫)

நங்கேள்வர் பாதத்து மஞ்சாத நான்மறை நூலிடத்துங், கொங்கேய்பொகுட்டுக் கமலாலயத்துங் குடிகொண்டமற், றெங்கேயிருக்கினு நாயடியே னுக்கிடர்வரும்போ, தங்கேவெளிப் படுவாய் மதுபுரி யம்பிகையே. (௰௬)

இணங்கே னொருவரை நின்னிருதாளன்றி யெப்பொழுதும், வணங்கே னொருவரை வாழ்த் துகிலேனெஞ்சில் வஞ்சகற்பாற், பிணங் கேனமிர்தம் பெருகுஞ் சிறியபிறைமுடித்த, வணங்கே சரணங்கண்டாய் மதுராபுரியம்பிகையே. (௰௭)

குன்றேயெனுமுலையார் தருங்காற் கொடுமையெலாம், வென்றேன் வெகுளியை விட்டுவிட்டேன்விரை

த்தாமரைத்தா, ளின்றேயென் சென்னி வைத்தா யினி யான்செயு மேவலெல்லா, மன்றேயுன் னேவல் கண்டாய் மதுராபுரி யம்பிகையே, (௰அ)

வடிவைத்த வேல்விழியா ரனுராகப மயக்கிற்செ ன்று, குடிவைத்த நெஞ்சென்று மீளுங்கொலோவன் புகொண்டதொண்டர், முடிவைத்த வாரென் முடித் தலை மேற்றுய்ய முகத்தின்தண்டை, யடிவைத்தகோ மளமே மதுராபுரி யம்பிகையே. (௰௯)

நெளிக்கும்புழுமொய்த்துமேயுங் குரம்பையுநின் றுமுயி, ரொளிக்கும்பொழுது வெளிப்படுவா யண்ட முண்டவண்ண, லுளிக்குங்கருணையிற் சூல்கொண்டு லாவித்தொடர்ந்துபடர்ந், துளிக்கும் பசுங்கொண்ட லே மதுராபுரி யம்பிகையே. (௨௰)

உலைகுதிக்குந்தழலூறிய கானலையுண்ணச் சென் று, கலைகுதிக்கும்படி போலுழன்றேன் சுழிற்சேல் வெருண்டு, வலைகுதிக்குஞ் செங்கழுநீருடைந்து வழி ந்தசெந்தே, னலைகுதிக்குந் தடஞ்சூழ் மதுராபுரியம் பிகையே. (௨௧)

ஏலமடங்குங் குழலாற் குற்றேவலி லெய்த்தடி யேன், கால்மடங்கு முன்வந்து நிற்பாய் விண்கடந்து நின்றுச கோலமடங்கு மறியாதபச்சைக் குழவிடைப் போ, லாலமடங்குமம்மே மதுராபுரி யம்பிகையே. ()

கொஞ்சுங் கிளிமொழியார்க் கன்பூண்டு குலையுமெ ன்ற, னெஞ்சம்பொற்பாத நினைப்பதுண்டோவெண்க

ணிலாமதியின், பிஞ்சுங்கழைவில்லு மங்குசபாசமும் பிச்சிமல, ரஞ்சுந்தரித்தவளே மதுராபுரியம்பிகையே.

செழுந்துங்கக்கொங்கையுமுத்தாரமும் பொற்சில ம்புந்திங்கட், கொழுந்துமகரகுழையு மெல்லாம்வண் டுகோடிசுற்றி, யுழுந்தும் பைசூடுந் திருமேனியுமுன் னுடனுமொன்று, யழுந்தும்பொழுதுமுண்டோ மது ராபுரியம்பிகையே. (உச)

பூண்டகைவாரிப் புதுமலர்தூவினின் பொன்னடிக் கே, கூண்டகைசென்னி குவிக்கப்பெற்றேன் பிறைக் கோடணிந்த, நீண்டகைவேழப் பிடரேறி வட்டகிலம் பிறக்கு, மாண்டகையேயணங்கே மதுராபுரி யம்பி கையே. (உரு)

கணையுங்குமிழு மிணைநெடுஞ்சாபமு நகரும்வெள் ளைத், துணையும்பவளமுஞ் செவ்விளநீருந் துவண்ட பச்சைப், பணையும்பனித் தடங்காந்தளும் பாந்தளும் பத்துமொன்று, யணையுந்திருவுருவே மதுராபுரியம்பி கையே. (உசு)

இணைக்கும்ப மென்முலையார் விழிவேலுக்கு மெய்யு மதன், கணைக்குந் தனியிலக்காய்விடவோ மணிக்கச்ச கலாத், துணைக்கும்ப மென்முலையார் சொக்கன்மேனி துவளக்கட்டி, யணைக்குஞ் சதானந்தியே மதுராபுரி யம்பிகையே. (உஎ)

மழைக்குந்தளமடவார் தருங்காதல் வலத்தலேப்பட், டுழைக்குஞ் சழக்கனேக் காப்பதுண்டோவிரண்டு சன்மணிக், குழைக்குங்கரந்த சுரும்பை யெல்லாங் குழையூடுநடங், தழைக்குங் கயல்விழியாய் மதுராபுரி யம்பிகையே. (உஅ)

முலேக்கேயவசத்தொழில் விளேப்பாரின்ப மோகமெனும், வலேக்கேயகப்பட் டருந்திவிடாமல்வலியவந்தேன், றலேக்கேபதம்வைத்த தண்ணளியே முத்தந்தத்துதிரை, யலேக்கேவிழிதுயில்வாய் மதுராபுரியம்பிகையே.

மணியுந்தவளமும் வெண்ணகையோவழி மூவர்செய்யத், துணியுந்தொழிருமுன் செய்தொழிலோ பத்தித்துத்திமுடிப், பணியுஞ்சுருளுங் கடலேழுமின்கரப் பங்கயத்தி, லணியுஞ்சிறுவளேயோ மதுராபுரியம்பிகையே.

அம்பிகைமாலே-முற்றிற்று.

சிறப்புப் பாயிரம்.

பிடித்தாரக்கட்டியணேத் தமுதூட்டிய பேயினுயிர் குடித்தாடுமாயன், குலசேகரன்வடகுன்றைச் சென்டாலடித்தானியற்றிய வம்பிகைமாலேயாறுகவி, படித்தார்கள் கற்பகக்காவும் பொன்னுடும் படைப்பவரே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.